அனுப்புநர்

தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை–600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்
அனைத்து செய்தி ஊடகங்கள்.

ந.க.எண். 218132 / எச்.எஸ்1 / 2018 **நாள் : 28.05. 2018**

ஐயா/ அம்மையீர்,

பொருள் : மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வு ஜூன்/ஜூலை 2018 – விண்ணப்பித்தல் மற்றும் தேர்வுக்கால அட்டவணை தொடர்பான செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – சார்பு.

–––––

நடைபெற்று முடிந்த மார்ச்/ஏப்ரல் 2018 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள்/வருகைபுரியாதவர்களுக்காக வருகிற **25.06.2018** அன்று தொடங்கி **04.07.2018** வரை நடைபெறவிருக்கும் ஜூன்/ஜூலை 2018, மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணை தேர்வெழுத விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள்/ தேர்வு மையங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் மற்றும் தேர்வு கால அட்டவணை வெளியிடுதல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

‘இது விளம்பரம் அல்ல’ எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/–
இயக்குநர்

இணைப்பு

1. செய்திக்குறிப்பு
2. தேர்வு கால அட்டவணை

அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வு ஜூன்/ஜூலை 2018

தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் மற்றும் தேர்வுக் கால அட்டவணை குறித்த செய்திக் குறிப்பு

நடைபெற்ற மார்ச்/ஏப்ரல் 2018 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள்/வருகைபுரியாதவர்களுக்காக வருகிற **25.06.2018** அன்று தொடங்கி **04.07.2018** வரை நடைபெறவிருக்கும் ஜூன்/ஜூலை 2018, மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள்/ தேர்வு மையங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் மூலமாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் மட்டுமே ஆன்–லைனில் விண்ணப்பிக்க இயலும். விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள்/தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று **30.05.2018 (புதன்கிழமை) முதல் 02.06.2018 (சனிக்கிழமை) வரை** ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

தனியார் Browsing Centre கள் மூலம் விண்ணப்பிக்க இயலாது.

தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை:

தனித்தேர்வர்கள் ஒரு பாடத்திற்கு ரூ.50 + (இதர கட்டணம் ரூ.35/–) சேர்த்து பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்தல்

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாட்கள் குறித்தான விவரம் பின்னர் அறிவிக்கப்படும். தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

தேர்வர்களுக்கு தேர்வெழுத தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படும்.

ஒம்/–
இயக்குநர்

சென்னை – 600 006
நாள்: 28.05.2018

DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI – 600 006

HIGHER SECONDARY SECOND YEAR SPECIAL SUPPLEMENTARY EXAMINATIONS,

JUNE /JULY – 2018

Examinations Commence at 10.00 a.m. ends at 1.15 p.m.

10.00 a.m. to 10.10 a.m.	**Reading the question paper**
10.10 a.m. to 10.15 a.m.	**Verification of Particulars by the Candidates**
10.15 a.m. to 1.15 p.m.	**Duration of the Examination**

Date and Day		Subjects
25.06.2018 MONDAY	**Part – I**	**LANGUAGE PAPER I**
26.06.2018 TUESDAY	**Part – I**	**LANGUAGE PAPER II**
27.06.2018 WEDNESDAY	**Part – II**	**ENGLISH PAPER I**
28.06.2018 THURSDAY	**Part – II**	**ÈNGLISH PAPER II**
29.06.2018 FRIDAY	**Part – III** **Part – III** **Part – III**	**CHEMISTRY** **ACCOUNTANCY** **GEOGRAPHY**
30.06.2018 SATURDAY	**Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III**	**MATHEMATICS** **ZOOLOGY** **MICRO BIOLOGY** **NUTRITION AND DIETETICS** **COMMERCE** **NURSING (Vocational)** **NURSING (General)** **TEXTILE & DRESS DESIGNING** **AGRICULTURAL PRACTICES** **FOOD MANAGEMENT & CHILDCARE**
02.07.2018 MONDAY	**Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III**	**COMMUNICATIVE ENGLISH** **INDIAN CULTURE** **COMPUTER SCIENCE** **BIO-CHEMISTRY** **ADVANCED LANGUAGE (TAMIL)** **HOME SCIENCE** **STATISTICS** **POLITICAL SCIENCE**
03.07.2018 TUESDAY	**Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III**	**BIOLOGY** **HISTORY** **BOTANY** **BUSINESS MATHS** **ACCOUNTANCY & AUDITING** **OFFICE MANAGEMENT**
04.07.2018 WEDNESDAY	**Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III** **Part – III**	**PHYSICS** **ECONOMICS** **GENERAL MACHINIST** **ELECTRONIC EQUIPMENTS** **DRAUGHTSMAN CIVIL** **ELECTRICAL MACHINES & APPLIANCES** **AUTOMECHANIC** **TEXTILE TECHNOLOGY**

Sd-/
DIRECTOR

Place: Chennai – 6
Date: 28.05.2018.